காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை

13-11-66

விலை 20 காசு



தம்பி

பறக்கும் குதிரை!

வெகு வேகமாகக் கிளம்பி, மிக முடுக்குடன் பேசி, வழக்கறிஞர்களையும் மருத்துவர்களையும் பொதுவாகப் படித்தவர்களையும் காங்கிரசுக்குள் கொண்டுவந்து சேர்த்து விடப்போவதாகச் சூள் உரைத்து, பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது என்பதைக் கண்டறிவதாக அறிவித்து, ஆரவாரத்துடன் ரமத கழகத்தை ஏசி வந்த, முன்னாள் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், ஏன் திடீரென்று வாய் மூடிக்கொண்டு விட்டார்: கூவி விற்றிட இருந்த சரக்கு தீர்ந்து போய் விட்டதா? அல்லது விற்பனை எதிர்பார்த்த விதமாக நடைபெறாததால், 'கடை'யை மூடிவிட்டாரா? என்ன காரணம் அந்த 'மேதை'யின் சந்தடி அதிகமாகக் காணோமே! என்று நண்பரொருவர் கேட்டார். உடனிருந்த மற்றோர் நண்பர்—அவர் பெரியார் கட்சி—ஒரு நேர்த்தியான புன்னகையை உதிர்த்துவிட்டுச் சொன்னார்,

> காரணம் விளங்கவில்லையா? அய்யா, ஒரு ஜாடை காட்டினார், காமராஜருக்கு; போயும் போயும் இந்த ஆசாமியையா நம்புவது என்பதாக; உடனே காமராஜர், கிருஷ்ணமாச்சாரியாரைக் கூப்பிட்டு "போதும் அய்யரே! உம்முடைய வேலை" என்று சொல்லிவிட்டார்!

என்று விளக்கம் அளித்தார்.

"அப்படி ஒரு மனப்பால் குடிப்பதானால் குடித்தபடி இரும்!" என்று கூறிவிட்டு, ஒரு கனைப்பு, ஒரு முறைப்புடன், மற்றோர் நண்பர் பேசலானார்; அவர் காங்கிரசை ஆதரிப்பவர்:

> பெரியார் சொல்லுவதைக் கேட்டு அதன்படி நடந்திடவா எங்கள் பெரியவர் இருக்கிறார்! அவர் என்ன பெரியாரைப்போல, பிராமணர்களைப் பார்ப்பான் என்று பேசிடும் போக்கினரா? எத்தனையோ கீர்த்திமிக்க அய்யர்—அய்யங்கார்—சாஸ்திரி—சாமாக்கள்—காமராஜருக்கு நண்பர்கள்! டி.டி.கே. இப்போது அதிகமாகப் பேசப் போவதில்லை; காரணம், அவர் காங்கிரஸ் சர்க்காரின் நிலைமையிலே ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், அதிர்ச்சிகள் ஆகியவைபற்றி அதிகக் கவலை கொண்டுள்ளார். இருக்குமல்லவா! பாருங்கள், இப்போது இந்த நந்தா விலகிவிட்டார்; இந்திராகாந்தியார் உடனே, அனுபவமிக்க டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அழைத்துப் பொறுப்பை ஒப்புவிக்க வேண்டுமல்லவா? செய்தாரா? இல்லையே! அதைப் பார்க்கும் போது அவருடைய மனம் வேதனையாகத்தானே இருக்கும்—என்றார்.

நான், எந்த ஒரு விளக்கமும் கொடுக்காமலிருக்கக்கண்ட அவர்கள், என்னைப் பார்த்தபடி "உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார்கள்.

"திட்டவட்டமாக ஏதும் கூறமுடியாது; ஆனால் ஒரு எண்ணம் தோன்றுகிறது, எனக்கு, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், காங்கிரசுக்காகப் பிரசாரம் செய்வது, அதிலும் சோஷியலிசம் பேசுவது, கேட்பவர்களுக்கே ஏதோ ஒரு கேலிக் கூத்துபோல இருப்



இடிமுழக்கம் நின்றது இதனால்தானே?

பதை அவரே உணர்ந்துகொண்டுதான், தமது பிரசார வேகத்தைக் குறைத்துக்கொண்டிருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன்'' என்று நான் கூறினேன்.

எதையாவது சொல்லிவைக்கலாம் என்ற போக்கிலே சொல்லவில்லை. உள்ளபடி, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள், சோஷியலிசம் பேசுவதைக் கேட்கும்போது, மக்கள் ஒரு கேலிச் சிரிப்பொலிதான் எழுப்புகிறார்கள்.

> காங்கிரசிலே 'தூண்களாக'வும், வலது கரங்களாகவும் உள்ளவர்கள், எப்படிப்பட்ட முதலாளிகள் என்பதை நமது கழகப் பேச்சாளர் எடுத்து விளக்கிவிட்டு, இத்தகையவர்களைக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சிதான் சோஷியலிசம் பேசுகிறது என்று கூறும்போது எழும் கையொலி வெறும் ஒலி அல்ல; உணர்ந்திருப்பாய் என்று நம்புகிறேன்.

மக்களுக்கு மயக்கமூட்டும், சொக்கவைக்கும் என்ற நினைப்புடன்தான், பாவம், காங்கிரசின் தலைவர்கள், சோஷியலிசம் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் அந்தத் தத்துவத்திற்குத் தந்திடும் விளக்கம் இருக்கிறதே அதனைக் கேட்டதும், மக்கள் அடைகின்ற எரிச்சலும் ஏமாற்றமும் கொஞ்சமல்ல. இதைத்தான் சோஷியலிசம் என்கிறீர்களா? இவர்களை வைத்துக்கொண்டுதான் சோஷியலிசம் கொண்டுவரப் போகிறீர்களா? இவர்களெல்லாம் இப்போது உள்ளதுபோலவே இருப்பார்கள், ஆனால் சோஷியலிசமும் இருக்கும் என்கிறீர்களா? ஓநாயும் இருக்கும், முயல்களும் ஓடி ஆடியபடி இருக்கும்; புலியும் இருக்கும் புள்ளிமான்களும் இருக்கும்; அப்படித்தானே இருக்கும் என்கிறீர்கள்!—என்று கேட்கிறார்கள்; வாய் திறந்து அல்ல; தமது குறும்புப் புன்னகையால்; கேலிப் பார்வையால்!

> இதனைக் கண்டறிந்ததால் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வெட்கப்பட்டுக்கொண்டு, சே! நாம்போய் மேடைமீது நின்றுகொண்டு சோஷியலிசம் பேசினால், எப்படி நம்புவார்கள்? வீண் முயற்சி! விளைவு விபரீதமானாலும் ஆகிவிடக்கூடும் என்று எண்ணிக்கொண்டுதான், தமது இடிமுழக்கத்தை நிறுத்திக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

மக்கள், தெளிவற்றவர்களாகவே இருந்துவிடுவார்கள்; பசப்புமொழி கேட்டு மயங்கிவிடுவார்கள்; இருபொருள் தந்திடும் பேச்சைப் பேசி அவர்களை ஏய்த்துவிடலாம் என்று நினைத்திடும் காங்கிரஸ் தலைவர்கள் உளர்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் பேசும்போது, மக்கள் மிக எளிதாக அவர்கள் பேசும் சோஷியலிசம்,

> வஞ்சகமானது
> பசப்புமிக்கது
> இருபொருள்கொண்டது

என்பதனை உணர்ந்துகொண்டுவிடுகின்றனர்.

மக்கள், உண்மையை உணர்ந்துகொண்டுவிட்டனர் என்பதனைக்; கண்டறிந்தபிறகு எப்படி அவர்களுக்குப் பேச இயலும்! கடையைக் கட்டிக்கொள்கிறார்கள்!!

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் பேசிடும் சோஷியலிசம், உண்மையான சோஷியலிசமாக இருக்க முடியாது; ஏனெனில் அவர்களே, முதலாளித்துவ அமைப்பின் பாதுகாவலர்கள்; அந்த அமைப்பிலே இருந்துகொண்டே, மக்களுக்கு இனிப்பளிக்கும் என்பதற்காக சோஷியலிசம் பேசுகிறார்கள் என்பதைப் பொதுமக்கள், அறிந்துகொண்டுவிட்டனர்.

> டி. டி. கிருஷ்ணமர்ச்சாரியார் தமது மின்னல் வேகச் சுற்றுப்பயணத்தை நிறுத்திவிட்டதற்கும்,
>
> காமராஜர்கூட, சோஷியலிசம் என்ற பேச்சுப்பேசி மக்களை மயக்க முடியவில்லை என்பதை உணர்ந்துகொண்டு,
>
> நிலவரியை எடுத்துவிடுகிறேன்!
>
> ஆளுக்கு ஒரு வீடு தருகிறேன்!
>
> பார்க்குமிடம் எங்கும் பள்ளிக்கூடங்கள் கட்டித் தருகிறேன், என்றெல்லாம் பேசி சுவைப் பண்டங்கள் வீசி மக்களை மயக்கலாமா என்று இப்போது முயற்சி செய்திட முனைவதற்கும் இஃதே காரணம்.

❋

எல்லோரும் பேசும்விதமாகப் பேசக்கூடாது: பேச்சிலே ஒரு புதுமை வேண்டும்; புதுமுறையாகத் தன் பேச்சு அமையவேண்டும் என்று நினைத்துக்கொண்ட ஒரு வாலிபன், திருமணம் செய்துகொள்ளச் சம்மதம் தரும்படி தன் காதலியிடம் கேட்டிடலானான். எப்படி?

> "கண்ணே நீ என் குழந்தைகளுக்குத் தாயாகவேண்டும்''

காதல் செய்த எந்தப் 'பயலும்' கேட்காத விதமான பேச்சு இது; மற்றவர் வாழ்க்கைத் தோணியிலே போகலாமா என்றோ, என் மன மாளிகையிலே உள்ளவளே! என் வீட்டின் திருவிளக்குமாகவேண்டும்; சம்மதந்தானே கண்ணே! என்றோ, கேட்டிருப்பார்கள். நாமோ! கேட்டஉடன், அவள் சொக்கிப்போய்விடுவாள்; அப்படியே தோளின்மீது சாய்வாள்; அடிமூச்சுக் குரலாலே, 'அத்தான்......' என்பாள், அள்ளி அணைத்திடலாம், இன்பம் பருகிடலாம் — என்றெல்லாம் அவன் எண்ணிக்கொண்டான்.

ஆனால், கன்னியோ, கடுங்கோபம்கொண்டவளாகி அவனைப் பார்த்து.

> "காதகா! இத்தனைக் காலமும் என்னைக் காதலிப்பதாக ஏமாற்றிக்கொண்டிருந்தாயா! ஏற்கனவே மணமாகி, குழந்தைகள் உள்ளவனா நீ! என்னை இரண்டாந்தாரமாக்கிக்கொள்ளவா இத்தனை காதல் நாடகமாடினாய்!''

சோஷலிசப்பேச்சு சுவைகூட்டும் என்பதால்

என்றெல்லாம் கடிந்துரைத்துவிட்டு, எழுந்தோடி விட்டாள்!

அவன், புதுமுறையிலே பேசுவதாக எண்ணிக் கொண்டு, கடிமணமாகி, காதற்கனி பிறந்திடும் நிலை பெற்றிடலாம் என்ற கட்டத்தைக் கூறினான்; பெண்ணோ, 'என் குழந்தைகள்'—என்று அவன் குறிப்பிட்டது. ஏற்கனவே ஒருவளை மணந்து அவன் பெற்ற குழந்தைகள் என்று எண்ணிக்கொண்டு, எரிச்சலும் ஏமாற்றமும்கொண்டாள்.

தம்பி! சொல்ல நினைப்பதை விளங்கும்படியும், வேறு பொருள் கொண்டிட முடியாத விதத்திலும் கூறிடவேண்டும். இல்லையேல் விபரீதமான விளைவுகள் நேரிடக்கூடும் என்பதனை விளக்கிடும் கதை இது.

இந்தக் காதலன் வஞ்சகன் அல்ல' புத்தி சாலித்தனத்தைக் காட்டிவிடவேண்டும் என்று துடித்திட்ட ஏமாளி.

வஞ்சகன், தன் நிலையை மூடிமறைத்திட முயலுவான்;

என் இதயத்தில் முதன்முதலாக இடம் பெற்றவள் நீயே!

இல்லறம் என்ற நல்லறம் நடாத்திடவே உன்னை நாடுகிறேன்!

என்று எதையாவது இனிப்புள்ளதாகக் கூறிவைப்பான். பெண் மயங்கி மனதைப் பறிகொடுத்தான பிறகு, அவன் ஏற்கனவே வேறோர் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டவன் என்பதனை அறிந்து பதறும்போது கூட, வஞ்சகன் கூசாமல் கூறிடுவான்,

என் இதயத்தில் அவளுக்கு நான் இடம் அளித்திடவில்லை; வீட்டில் மட்டுந்தான்; அதுவும் பெற்றோர் கொடுத்த தொல்லைக்காக மட்டுமே!

அவள் வீட்டில் இருக்கிறாள், ஆனால், அவளுடன் சேர்ந்து நான் இல்லறம் நடாத்தவில்லை. அதனை நான்முன்பே உனக்குக்கூறினேனே! கவனிக்கவில்லையா?

என் இதயத்தில் முதன் முதலாக இடம் பெற்றவள் நீயே — என்று அன்று சொன்னேன்; இன்றும் அதனையே கூறுகிறேன்; மனைவி என்ற பெயருடன் ஒருவள் என் வீட்டில் இருப்பதாலேயே, என் இதயத்திலும் இருப்பாள் என்று எண்ணிக்கொள்ளலாமா! அங்கு உனக்குத்தான் இடம்! உனக்கு மட்டுந்தான்!

என்று பசப்புவான்; தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்ட பாவை என் செய்வாள்?

இவ்விதமான பேச்சு, இருபொருள் தருவதாக அமைவது; உண்மையை மறைத்திட பொய்மைக்கு ஒரு பொலிவளிக்கும் பூச்சு சேர்த்துத் தந்திடும் முறை.

அவ்விதமான பேச்சு பலன் தரவில்லை என்பதனை உணர்ந்துகொண்டபிறகு, காங்கிரஸ் தலைவர்களுக்குத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதிலே எப்படித் 'தெம்பு' பிறந்திட முடியும்!

காமராஜரோ, 'தெம்பு' இருக்கிறதோ இல்லையோ இந்த சோஷியலிசப் பேச்சு தவிர, மக்களுக்குச் சுவையூட்டும பேச்சு வேறு இல்லை என்பதை உணருவதாலே, அதனையே பேசிவருவது என்று தீர்மானித்து விட்டார். வேறு என்ன செய்வார்!

கட்டிய பள்ளிக்கூடங்களைப் பார்த்தீர்களா? என்று காமராஜர் கேட்டால், கொட்டிக் கொடுத்த வரிப்பணம் கொஞ்சமா? என்று மக்கள் கேட்கிறார்களே! பதில் என்ன சொல்ல முடியும்!!

பார்! பார்! மின்சார விளக்கு பார்!— என்கிறார்; இதைவிட அதிசயத்தைக் காட்டினான் வெள்ளைக்காரன்—ஆகாய விமானமே காட்டினான்! அவன்கூட இப்படி, பார்! பார்! என்று கூவிடவில்லையே என்று மக்கள் எண்ணிக் கொள்கிறார்கள்; காமராஜரின் பேச்சு அவர்கள் மனதிலே அவர் எதிர்பார்க்கின்ற ஒரு களிப்பினை ஊட்டிட முடியவில்லை.

எப்படிப்பட்டவர் தெரியுமா தலைவர்? உலகப் பெருந்தலைவர்!! என்று உடனிருப்போர் உடுக்கை அடிக்கிறார்கள்! ஆமாமய்யா ஆமாம்! அவர் புகழ் ஏறுகிறது, உச்சிக்கு; எங்கள் வயிறு காய்கிறது பட்டினியால்!— என்று மனம் நொந்து கூறுகிறார்கள் மக்கள்.

ஆகவே காமராஜர், காங்கிரசின் சாதனைகள் பற்றிய பட்டியலை நீட்டி, ஓட்டு கேட்டிட முடியவில்லை. தேர்தலிலே நிற்பதற்காக அவர் தேடிப் பிடித்து இழுத்து வந்திடுவோரும், காங்கிரசிலே நீண்ட காலமாக இருந்து பணியாற்றி, இன்னல் இழப்புக்களுக்கு ஆளானவர்கள் அல்ல.

விளைந்த காட்டுக் குருவிகள்!

ஆகவே, இருப்பதற்குள் ஓரளவு சுவையூட்டக் கூடிய பேச்சு, சோஷியலிசம்தான் என்று அவருக்குத் தோன்றுகிறது. ஆகவே ஒரு நாலு கூட்டத்தில் அதுபற்றிப் பேசிப் பார்க்கிறார்.

சோஷியலிசம் பேசுகிறீர்; ஆனால் இத்தனை சீமான்களையும் உடன் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே— எப்படி இது பொருந்தும்? மக்கள் நம்புவார்களா? என்று அவரிடம் யாராவது கேட்டால், தம்பி! ஒரு பெரிய வெடிச் சிரிப்பு சிரித்துவிட்டு,

சோஷியலிசம் பேசிவிட்டால், ஓட்டு வந்து குவிந்துவிடுமா!

நோட்டுகள் வேண்டாமா — தேர்தலை நடத்த!!

நோட்டுகளை யார் தருவார்கள்? ஓட்டர்களா!!

ஓட்டாண்டிகளிடம் ஏது நோட்டு?

(13-ம் பக்கம் பார்க்க)

நேரமில்லை!

பொருட்படுத்தத் தேவையில்லாத சிறிய சில்லறை விஷயங்களுக்கு நம் மனதில் இடமளித்து, அதனால் நம் மன அமைதியைக் குலைத்துக்கொள்கிறோம்! கொஞ்சநாளில் நாமும் மற்றவர்களும் மறந்துவிடப்போகிற மனத்தாங்கல்களை நினைத்து நினைத்து விலை மதிப்பற்ற நேரத்தை இழந்து விடுகிறோம். இதனை விடுத்து, உருப்படியான காரியங்கள், உணர்ச்சிகள், உயர்ந்த சிந்தனைகள், உண்மை அன்பு, முயற்சி இவைகளுக்காக நம்மை அர்ப்பணிப்போம்! வாழ்க்கை சுருக்கமானது—இதில் சின்னத்தனத்துக்கு நேரமில்லை!

—ஆண்ட்ரே மார்வா.

காஞ்சி

மலர் 3 | 13—11—66 | இதழ் 16

வேண்டாம் வன்முறை!

"தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்"

—என்பது வள்ளுவர் வாக்கு. இந்த இலக்கணத்திற்கு ஓர் இலக்கியம்போல், 1948-ல் சுதந்திரத்தின் பிதா என்று வணங்கப்படும் காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றனர், மதவாதம் பேசிவந்த ஒரு நிறுவனத்தார். கூப்பித் தொழுத கரங்களுக்குள் துப்பாக்கி!

கடந்த கிழமை தொடக்கத்தில், இந்தியத் தலைநகரில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளையும், வன்கண்மைகளையும் காணுகிறபோது, எதிர்கால இந்தியாவைப்பற்றிய எண்ணம் கவலைக்குரியதாகவே இருக்கிறது.

காந்தியாரது, உயிரைக் குடிக்கக் காரணமாக எந்த மதவாத நிறுவனம் இருந்ததோ, அதே நிறுவனம்தான், இப்போதும் சில, துணை அமைப்புக்களின் கூட்டுடன், தலைநகரில், வன்முறைகளைத் தாண்டவமாட விட்டுள்ளது என்பதை இதழ்களின் மூலம் அறிகிறபோது கவலைகள் கால்கோளுகின்றன.

கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள அரசு — தனியார் சொத்துக்களுக்கும், ஒன்பதின்மர் உயிருக்கும் ஊறு விளைவித்த அக்கேட்டிற்குக் கூறப்படும் காரணம்,

> "பசுக்கள் வதை செய்யப்படாமல், கொலை செய்யப்படாமல், அவற்றின் உயிர் பாதுகாக்கப்பட ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும்"

—என்ற கோரிக்கைமீது எழுந்ததாகும் என்பதுதான்.

பசு வதைகளைச் சட்டரீதியாகத் தடுக்கக் கேட்டு ஒன்பதின்மர் உயிரைப் பலிகொண்டு இருநூறுக்கு மேற்பட்டவர்களது வாழ்வையும் வதைத்திருக்கிறார்கள்.

கேடுபாடுகளையும், கொலைத்தன்மைகளையும் கட்டவிழ்த்துவிட்டு, மிக இழிந்த செயலாக—கேவலமிக்கதாக அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர் காமராசர் குடியிருந்த வீட்டையும், அவரது உதவியாளரையும் தாக்கி இருக்கின்ற நிகழ்ச்சி காணப்படுகிறது.

ஜனநாயக நாடு என்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின், சுதந்திரமான கருத்துக்கள் சொல்லப்படுவதற்கும், சிந்தனைகள் நிலவுவதற்கும் உரிமையுண்டு.

இதன் காரணமாக, ஆளும் கட்சியினரது கருத்துக்கு இயையவே, எதிர்க்கட்சியினரது கருத்தும் ஒருமித்து இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

மாற்றுக்கருத்துக்கள் கூறப்படும்போது, அதனைப் பொறுமையுடன் ஏற்று நல்லது, கெட்டதைப் பகுத்துணர்ந்து செயல்படுவதுதான் நல்லாட்சி இலக்கணமாகும். இதனைவிடுத்து மாற்றுக் கருத்துக்கள் கூறப்படும்போது—அக்கருத்துக்களைக் கூறுவோர் மீது அரசு கொள்கின்ற காழ்ப்புதான், முக்கியமான வன்முறைகளைத் தூண்ட காரணமாகிவிடுகின்றன. ஆளும் கட்சியே சிலபல இடங்களில் இத்தகு வன்முறைச் செயல்களுக்கு வித்திட்டு விபரீதங்களை விளைக்கப் பழக்கப்படுத்தி வைத்துவிட்டதன் எதிரொலிதான் டில்லியில் நடைபெற்ற அருவெறுக்கத் தக்க நிகழ்வுகள் என்று கூட சொல்லத் தோன்றுகிறது.

இப்போதுதான் முதன் முதலாக இந்தியத் துணைக்கண்டத்திலேயே வன்முறைகள், தலையெடுத்திருக்கவில்லை. துணைக்கண்டம் முழுவதும், பல மாநிலங்களில், பற்பல காரணங்களுக்காக, இவ்வகைக் கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன.

> "மக்களுக்குத் திடீரென வெறி பிடித்துப் போய்தான் நாட்டில் பல வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன என்று சொல்லிவிட முடியாது; அதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. சமூக, பொருளாதார காரணங்களைப் புறக்கணித்து விட்டு சில அரசியல் கட்சிகள் சொல்வதையும் செய்வதையுமே கவனித்துக் கொண்டிருந்தோமானால்......"

—என்று நிர்ப்பந்தம் காரணமாக பதவி துறந்த நந்தா அவர்கள் இந்தியப் பிரதமருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிடுவதுபோல், சமூக, பொருளாதாரக் காரணங்களைப் புறக்கணித்து வேறெதனையோ கவனித்து வந்திருப்பதன் காரணமாகவே ஆங்காங்கே இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கிவிட்டன.

எப்படியாயினும், அரசியல் காரணமாகத் தலைவர்கள் தாக்கப்படக்கூடிய அளவுக்கு நாட்டில் வன்முறைச் செயல்கள் நடைபெறத் தொடங்குவது விரும்பத்தக்கதல்ல. உடனடியாகத் தடுக்கப்பட வேண்டிய பேரபாயமாகும்.

தீயமைச் செயல்களின் பிடியிலிருந்து காமராசர் தப்பியது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்'

கேள்வி--பதில்!

(1) அண்மையில் நடைபெற்ற பல ஆர்ப்பாட்டங்களுக்குக் காங்கிரசாரே காரணம் என்று கூறப்படுகிறதே உண்மையா?

பிரதமர் இந்திரா காந்தியே கூறியிருக்கிறாரே, 'இத்தகைய சில ஆர்ப்பாட்டங்களுக்குக் காங்கிரஸ்காரர்கள் சிலா ஊக்கமளிப்பது வருந்தத்தக்கது என்று!

(2) காங்கிரசுத் தலைவர் காமராசரது வீடு தாக்கப்பட்டது கண்டிக்கத்தக்கதில்லையா?

நிச்சயமாக! அரசியல் காரணங்களுக்காக, அரசியல் தலைவர்கள் தாக்கப்படுகின்ற மிருகத்தனமான நிலை வளர்வதை அறிவுலகம் ஏற்றுக்கொள்ளாது.

(3) பசுவதைத் தடைச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தால்தான் என்ன?

அதனால் 'கொஞ்சம்' வருவாய் குறைந்துவிடக் கூடுமேயென்று யோசிக்கிறதோ என்னவோ! அல்லது, உணவுப் பற்றுக்குறை நிலைமை நீடித்துக்கொண்டு இருப்பதால், தயக்கம் காட்டுவதாகவும் இருக்கலாம்! ஆனால் ஒன்று, பசுவதைத் தடை விஷயத்தில் 'இப்படியொரு சட்டம் கூடாது' என்பது காங். அரசின் கொள்கையாம்!

(4) உள்துறை அமைச்சர் நந்தா ராஜினாமா விவகாரத்தில் காமராஜர் தலையிட விரும்பவில்லையாமே, உண்மையா?

அப்படித்தான் செய்தி வந்திருக்கிறது. ஆர்ப்பாட்டக்காரர்களின் மிரட்டலுக்கு அவர் பணிந்து விட்டதாகக் காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சி குற்றம் சாட்டி அவர் பதவி விலகலைக் கோரியது. பிரதமருக்கு, ஏற்கனவேயே நந்தாவைப் பதவித் துறக்கச் செய்யவேண்டுமென உள்ளெண்ணம் உண்டாம். அவர் எண்ணம் ஈடேறத்தக்க சந்தர்ப்பம் கிடைத்திருககிறது. ஆனால், கட்சி மாநாட்டில், 'ராஜினாமாச் செய்துவிட்டுப்போயேண்' என்று அமைச்சர் சுப்பிரமணியத்தை மட்டும் கூறிய காமராசர், நந்தா விவகாரத்தில், முற்றிலும் பிரதமர் பொறுப்பு' என்று கூறியிருப்பதானது, ஒன்று கட்சியிடத்தில் தான் கொணடுள்ள வெறுப்பைக் காட்டுவதாக இருக்கவேண்டும்; அல்லது, பிரதமர் போக்கு எப்படி யெல்லாம் போகிறது பார்ப்போமே என்று 'வேடிக்கைப்' பார்க்கும் மனோபாவமாக இருக்க வேண்டும்! எப்படியாயினும், இது காமராசர்—பிரதமர் பூசலை உறுதிப்படுத்துவதான நிகழ்ச்சி என்பது தெளிவு.

(5) அரசியல் காரணங்களுக்காகமாணவர்கள்ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடக்கூடாது என்றால், இந்தி மொழி விவகாரத்திலும் அவர்கள் ஈடுபடக்கூடாது என்பது ஒப்புக்கொள்ளக்கூடியதுதானே.

தவறான முடிவு. மாணவர்கள் தங்கள் படிப்புக் காலங்களில், படிப்புக்குரிய விஷயங்களிலேயேமுழுக்கவனமும் செலுத்த வேண்டும். கல்வி தொடர்பான விஷயத்தில் அரசினர் போக்கு விரும்பத்தக்கதாயில்லை. கல்விக் கூடங்களில் அரசுத் தலையீடு அதிகமாகிவிட்டதாகக் கூறப்படுகிறது. இத்தலையீடுகள் காரணமாக மாணவர்களின் கவனம் திசை திருப்பிவிடப்படுகிறது. தடம்புரண்ட வண்டியின் நிலை என்னாகும்? வருங்காலத்தை வழி நடத்திச் சென்று வகைப்படுத்துவோராவர் மாணவர்கள். ஆகவே நிகழ்காலத்தை அவர்கள் நிச்சயமாகப் புரிந்துகொண்டு தீர வேண்டும். புரிந்துகொள்ள வேண்டும்என்பதற்காகப்புரிந்து கொண்ட அரசியலில் அவர்கள் படிப்புக் காலங்களில் ஈடுபட வேண்டும் என்பது பொருளல்ல. ஈடுபடவும் கூடாது. ஆனால், இந்தி மொழியைப் பொறுத்த வரையில், மொழி கல்வியுடன் கலந்திருக்கிறது. அதனைக் கற்போர், அது தொடர்பாக ஒரு முடிவுக்கு வருவதனைத் தவறு என்று கூற முடியாது.

(6) முதல்நாள் செங்கை மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு, மறுநாள் தென் கோடியிலுள்ள தூத்துக்குடிக்குச் செல்ல முடிந்தது—காங்கிரசார் செய்த சாதனையென்றும், அவர்கள் சாலை வசதி செய்து கொடுத்ததால்தான் அப்படிப் போக முடிந்தது எனவும் காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் பேசினார்; சரிதானே இது?

காங்கிரஸ் பேச்சாளர்தானே, பேசினார்; காங்கிரஸ்காரர் இல்லையே! காங்கிரஸ்காரரானால், அவருக்குத் தெரியும் — கட்டை வண்டிப் போய்க்கொண்டிருந்த நாட்டில் ரயில் வண்டிகளைப் போகச் செய்தது வெள்ளைக்காரர்கள்என்று! சாலைப் போக்குவரத்துக்களுக்கு வெள்ளைக்காரர்கள் எவ்வளவு முக்கியம் கொடுத்து விரிவுபடுத்தினார்கள் என்பது, 60, 70 ஆண்டுக்கால காங்கிரசார் அறிவார்கள். ஆங்கிலேயர்கள் போட்டுக் கொடுத்த பாதையில் சென்றுதான், சில பாதைகளுக்குக் காங்கிரசார் 'காண்ட்ராக்ட்' எடுத்தார்கள் என்பதுகூடவா சொல்லித் தெரிய வேண்டும்? காங்கிரஸ் பேச்சாளர், கூலிப் பெற்றுக் கொண்டு பேச வந்தவர்; குடி புகுந்தவருக்குத் தெரியாதே, அந்த வீட்டின் அஸ்திவாரம் எத்தனை அடி ஆழம் என்று!!

(7) தி. மு. கழகம் குழந்தைக் கட்சி என்று வருணிக்கிறார் காங்கிரஸ் பேச்சாளா ஒருவர்!

இருக்கட்டுமே! 'குழந்தை' யென்றால் வளர்கின்ற எதிர்காலம் அதற்கு உண்டு! 'குடுகுடு' கிழட்டுக் கட்சி காங்கிரஸ் என்றால், முதுமைக்கு எதிர்காலம் எதுவென்று நான் சொல்ல வேண்டுமா?

(8) சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உணவு நெருக்கடி அதிகமாகவா இருக்கும்?

உணவு அமைச்சர் சுப்பிரமணியம் அப்படித்தான் சொல்லி இருக்கிறார். சென்ற ஆண்டு போல, இந்த முறை அமெரிக்கா அதிக அளவுக்கு உணவுப் பொருள் உதவி தரும் நிலைமையிலில்லையாம். அதன் 5-ல் ஒரு பகுதிவிலை வை,இந்தியா இறக்குமதி செய்துகொள்வதாகவும், இன்னும் பல நாடுகளுக்கு அமெரிக்கா உணவுப் பொருள் உதவி செய்ய வேண்டியிருப்பதாலும், அங்கேயே 'தட்டுப்பாடு' ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதென

அறிவித்துள்ளது. அதனால், முன்போல், அவ்வளவு இறக்குமதியை எதிர்பார்க்க முடியாது என்று கூட உணவு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். நாட்டு உணவு நிலைமைபற்றி அமைச்சர் சுப்பிரமணியம் அறிந்துகொண்டு அறிவிப்பதைவிட, தமிழக முதலமைச்சர், நாட்டில் தட்டுப்பாடில்லை; போதிய கையிருப்பு இருக்கிறது — என்று அறிவிப்பது ஆறுதலளிக்கக் கூடியதுதான்! ஆனால் வார முழுவதும் ரேஷன் அட்டைகளுக்கு அரிசி தரமுடியாத நிலையும், படி அரிசி இரண்டரை-மூன்று ரூபாய் என விற்கப்படுவதுமான நிலை — முதலமைச்சர் பேச்சை உறுதிப்படுத்துவதாக இல்லை!

(9) சர்ச்சார்ஜ்' விலக்களித்திருப்பது வரவேற்கத்தக்கது தானே!

மகிழ்வோடு வரவேற்கிறேன்! ஆனால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சட்ட மன்றத் தொடர்க் கூட்டத்தில் புதிதாக விதிக்கப்பட்ட 'சர்சார்ஜை'த்தான் இப்போது நீக்கி இருக்கிறார்கள் என்பதையும், இதனை விதிக்கக் கூடாது என்று கழகம், வாதாடி வெளிநடப்புச் செய்ததனையும் புரிந்துகொள்ள வேண்டும்!

(10) புயல் நிவாரண நிதியாக ரூ. 2-கோடி தேவையென அமைச்சர் அளகேசன் பிரதமரிடம்கேட்டிருக்கிறாரே தெரியுமா?

தெரியுமே! ஐம்பதாயிரத்தை பிரதமர் அனுப்பி தன் 'ஆழ்ந்த அனுதாபத்தை'யும் தெரிவித்துவிட்டார் என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

(11) இந்திய 'ஜனநாயகம்' எப்படி இருக்கிறது?

1967 தேர்தல் முடிவைப் பொறுத்திருக்கிறது!

(12) விலை உயர்வைக்குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியாதா என்ன?

எப்படி முடியும்? பல பொருள்களின் விலையை அரசே கூட்டி விற்க முயலும்போது! தமிழகத்தில் தயாராகும் சர்க்கரைக்கு வடக்கே, விலை நிர்ணயம் செய்து இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் சர்க்கரை விலை அதிகம் என்று கூறத்தக்க அளவுக்கு விலையேற்றி விற்கிறது. மாநிலங்களுக்கு மாநிலம் பெரிய வேறுபாடு இருக்கிறது. ஒரு உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளுங்கள். இராசஸ்தானிலிருந்து 'கொண்டைக் கடலை' ரூ. 61க்கு தமிழக அரசு கொள்முதல் செய்து, அதனை ரூ. 135-க்கு விற்பனை செய்கிறதாம்! போக்குவரத்துச் செலவு ரூ. 10-கூட ஆகாத நிலையில் ரூ. 64- ஒரு குவிண்டாலுக்கு மட்டும் லாபம் வைத்து வாணிகம் செய்யும் அரசும், அந்தப் போக்கும் உள்ள வரையில், விலை உயர்வை எப்படித் தடுக்க முடியும்?

(13) 'ஆரோக்யமான அரசியல்' என்றால் என்ன?

தற்போதைய 'காங்கிரஸ் அல்ல' என்றால் புரியும் என நினைக்கிறேன்!

(14) ஒரு நாட்டின் உள்துறை அமைச்சர் மாற்றப்படுவது அரசியலில் எதனைக் குறிக்கும் என்று விளக்குவீர்களா?

பொதுவாக, உள்நாட்டு நிர்வாகக் கொள்கையில் முரண்பாடுகள் செயலாக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது போதிய திறமையின்மை வெளிப்பட்டிருக்கவேண்டும்! என்பதை.

(15) உருக்காலைகள், மத்திய அரசின் நிர்வாகத்தில் அமைக்கப்படும்போது, அது எங்கு அமைந்தால் என்ன? லாபங்களை மத்திய அரசுதானே எடுத்துக் கொள்கிறது!

தொழிலின் லாபநட்டக் கணக்குப் போடும்போது, உங்கள் கருத்து சரியாக இருக்கக்கூடும். ஆனால், ஆலைகள் அமைகின்ற இடத்தைப் பொறுத்து, அதன் சுற்று வட்டாரம் பிற வேறுபல தொழில்களால் வளர்ச்சி பெறவும், பலர் வாழ்வு பெறவும் வழியுண்டு. ஆலையை மையமாய்க் கொண்டு, தொடங்கப்படுகின்ற பல துணைத் தொழில்களால், அந்த வட்டாரத்து மக்களின் வாழ்க்கை வளம் பெருகும். மாநில அரசுக்கும் இதில் ஓரளவு வருவாய் இருக்குமே!

(16) இரஷ்யா-சீன பகைமை வலுத்துக்கொண்டேபோகிறதா?

ஆமாம்! இருநாட்டு எல்லைகளிலும் இரு அரசுகளும் பாதுகாப்பைப் பலப்படுத்தி இருக்கின்றனவாம்! சிதறிக்கிடக்கும் துருப்புக்களைத்திரட்டி, எல்லைப் பகுதிகளுக்கு அனுப்பிக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. இந்தத் துருப்புக்களிடையே, ஆங்காங்கே மோதல்கள் கூட தொடங்கிவிட்டனவாம்! இரஷ்ய-அமெரிக்க உறவு வலுப்பட, வலுப்பட சீன-ரஷ்ய உறவு சிதையத் தொடங்கி இருக்கிறது என்று அரசியல் பார்வையாளர்கள் கருத்தறிவிக்கிறார்கள்.

(17) டாக்டர் சுபாந்திரியோவின் உயிர் பறிக்கப்பட்டுவிடுமா?

இந்தோனேஷிய ஜனாதிபதியின் மனப் பாங்கைப் பொறுத்த விஷயம் இது.

(18) பஞ்சாப், ஹரியானா அமைச்சரவைகளுக்குஇவ்வளவு அமைச்சர்கள் தேவையா?

சிக்கனம் பற்றி வாய் மலியப் பேசுபவர்கள் அல்லவா, காங்கிரசுக்காரர்கள்! சிக்கலறுக்க இப்படிச் செய்திருக்கிறார்கள் போலும்.

(19) நிலவரியை அடுத்த ஆண்டில்தான் நீக்கமுடியும் என்பதன் பொருள் என்ன?

வருகிற தேர்தலில் காங்கிரசைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அரசு, அச்சுறுத்துகிறதோ!

(20) உழைப்பாளர் கட்சிகூட கழகத்துடன் தேர்தல் கூட்டுக்கு முடிவெடுத்துள்ளது தெரியுமா?

மகிழ்ச்சி. காங்கிரசின் சர்வாதிகார வெறித்தனத்தைச் சாய்க்க, இது வரவேற்கத்தக்கதே!

(21) பாதுகாப்புச் சட்டமும், நெருக்கடிநிலைப் பிரகடனமும் இன்னமும் நீக்கப்படாமலேயே இருக்கிறதே!

ஆமாம்! 1967 தேர்தலை இச்சட்டங்களின் துணைகொண்டுதான் நடத்தி முடிக்க அரசு விரும்புகிறது போலும்!

(22) இந்திய நாட்டு ஆர்ப்பாட்டங்களைப்பற்றிஅறிய வெளிநாடுகள் முயல்கின்றனவா?

அதனைவிட, இந்தியத் தேர்தலின் முடிவு எப்படி இருக்கும் என்பதை அறியும் முயற்சியிலேயே முக்கியமாக ஈடுபட்டுள்ளன என்றே நினைக்கிறேன்.

(23) நான் கழக அனுதாபி! தேர்தலில் நான் எப்படி ஒத்துழைக்க முடியும்?

கழகத்தினர் நடாத்துகின்ற இதழ்களையும், ஏடுகளையும் வீடு வீடாகப் பரப்ப உடனே முயலுங்கள்; நீங்களும் படியுங்கள்; படித்ததனையும் பரப்புங்கள்! ●

2—24

உடல் சிலிர்த்தது

"ஆய்யோ வேண்டாம்! வாளை உறையில் போடுங்கள்" என்று அஞ்சலை பதறிக்கொண்டே சொன்னாள்.

"எதற்காக நீ பயப்படுகிறாய் அஞ்சலை? இவனால் என்னை வெட்டி வீழ்த்திவிட முடியும் என்று நினைக்கிறாயா? முடியாது அஞ்சலை, இவனால் முடியாது! என்னிடமோ ஆயுதம் ஒன்றுமில்லை! கைகளால் ஒன்றும் ஆகாதென்பதைத் தெரிந்துகொண்டு, கத்தியை உருவும் இவன் சுத்த வீரன் அல்ல என்பதைத் தெரிந்துகொண்டேன்! வீரனல்லாதவன் வாள் ஏந்தினாலும் — வேல் உயர்த்தினாலும் — என்ன செய்துவிடமுடியும்! இதோ இந்த இரு கரங்களே போதும், இந்த இடத்திலேயே இவனைக் கிழித்துப்போட்டு விடுகிறேன் பார்! அஞ்சாதே அஞ்சலை! நீ ஒன்றுக்கும் அஞ்சாதே!"

புதருக்குப் பக்கத்தில் பதுங்கியிருந்து கயிற்றை வீசி, குதிரையோடு தங்களைத் தரையில்சாய்த்தவன், அஞ்சலையைப் பெயரிட்டு அழைப்பதையும்—அவளுக்கு ஆறுதல் வார்த்தை புகல்வதையும்—கேட்டு கனகசேனன் ஒரு கணம் அப்படியே அசைவற்று நின்றுவிட்டான்.

உருவிய வாளின் முனையைத் தடவிப் பார்த்தபடி, அஞ்சலையையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தான்.

"அபலை ஒருத்திக்கு நன்மை செய்யவேண்டுமென்று, இத்தனை நாள் பாடுபட்டு, இப்படியா துன்பத்தில் முடிந்துவிட வேண்டும்? அஞ்சலை என்னை ஏமாற்றிவிட்டாள்! ஆம், நான் ஏமாந்து போனேன்! தூமகேதுவின் சிறையிலிருந்து தப்பிக்க என்னைப் பயன்படுத்திக்கொண்டு—தப்பி வரும்போது—வழியில் இப்படி ஒரு முரடனை வந்திருக்கும்படி முன்னேற்பாடு செய்து வைத்திருந்தாள் போலும்! முன்னர் இவளுக்கு நான் செய்த கேட்டிற்காக, இப்படி என்னைப் பழிக்குப் பழி வாங்குவாள் என்பது தெரியாமல் போயிற்றே!' என்று கனகசேனன் மனத்தில் எண்ணங்கள் உருண்டன.

"இவர் நம்மைப் பிடிக்க தூமகேதுவினால் ஏவிவிடப்பட்ட ஆள் அல்ல! நமது விரோதி அல்ல இவர் —நமக்கு மிகவும் வேண்டியவர்!" என்று கனகசேனனுக்கு எதிரிலிருந்தவனைச் சுட்டிக்காட்டி அஞ்சலை பேசினாள்.

"இவன் யார்?" என்று கனகசேனன் வெறுப்போடு கேட்டான்.

"இவர் என் அண்ணா! பெயர் இளந்திரையன்!"

"உன்னுடன் பிறந்த அண்ணனா இவன்?"

"என்னுடன் பிறந்த ஆசை அண்ணாவின் அருமை நண்பர் இவர்!"

"அப்படியா?" என்று வாளை உறையினுள் போட்டான் கனகசேனன்.

அஞ்சலை கனகசேனனோடு பேசும் முறையையும் அவளது முகபாவங்களையும் கண்டு, இளந்திரையனின் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது.

"ஒருவேளை அஞ்சலையின் காதலனாக இருப்பானோ இவன்? தூக்கிச் சென்ற துன்மார்க்கனிடமிருந்து இவளை இப்பொழுது விடுவித்து வருகிறானோ இவன்?" என்ற சந்தேகத்தோடு, அஞ்சலையின் முகத்தைத் திரும்பிப்பார்த்தான்.

"அண்ணா, இவர் யார் என்று தங்களுக்குச் சொல்லவில்லையே! இவர்தான் சேரநாட்டு இளவரசர்!"

"அப்படியா?" என்று ஆச்சரியத்தோடு கனகசேனனின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

"ஏனப்பா, இளவரசர் என்று சொன்னதும் பயமாகிவிட்டதா?" என்று கனகசேனன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"இளவரசர் என்றதும் பயமா? எனக்கா! அஞ்சலை, நாமெல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை இவரிடம் இன்னமும் நீ கூறவில்லையா?"

"அஞ்சலை கூறவில்லை, இப்பொழுது நீதான் சொல்லேன் கேட்கிறேன்?"

"யானை பெரியதா, சிங்கம் பெரியதா?"

"எதில்?"

"வெளித் தோற்றத்தில்!"

"யானைதான் பெரியது!"

"அரசராகிய நீங்களெல்லாம் யானைகள்! நாட்டுப் பற்றுக்கொண்ட இளைஞராகிய நாங்களெல்லாம் சிங்கங்கள்! சிங்கத்தின் எண்ணமெல்லாம், எப்பொழுது எப்படி யானையை அடித்து வீழ்த்துவது என்பதுதான்!"

இவ்வாறு ஆணவத்தோடு இளந்திரையன் சொல்லியதைக் கேட்டதும், சட்டென்று கனகசேனனின் முகம் மாறிவிட்டது!

அதைக் கண்டதும், அஞ்சலையின் உள்ளத்தில் கவலையின் நிழல் விழுந்தது. இளவரசன் ஏதோ விளையாட்டிற்குச் சொல்ல, அதை விபரீதத்திற்குக் கொண்டுவந்துவிட்டானே இளந்திரையன் என்றெண்ணி வேதனை அடைந்தாள். கனகசேனனின் முகம் ஆத்திரத்தால் சிவப்பாவதைக் கண்டதும், அவளது வருத்தம் அதிர்ச்சியாக மாறி, அந்த அதிர்ச்சி அச்சமாக உருக்கொண்டுவிட்டது!

'என்னதான் அதிகாரம் இருந்தாலும், எவ்வளவுதான் பலமிருந்தாலும் இப்படியா அக்கிரமம் செய்வது! எந்த மக்களைக் காத்துப் பராமரிக்க வேண்டுமோ, அதே மக்களை வேட்டையாடினால்—முடிவு என்னவாகும்? யானைக்கு மதம் பிடித்துவிட்டால், ஊரே அல்லோலகல்லோலப்படும்! எதிரில் வந்தவர்களையெல்லாம் அது கொன்று போடும்! தன்னை வளர்த்துப் பழக்கிய பாகனையே தூக்கிப்போட்டுக் காலால் தேய்த்துவிடும்! அந்த வெறிபிடித்த போக்கிலேயே, எத்

தனை நாட்களுக்கு அது உயிரோடு உலவ முடியும்? வேலும் வாளும் குத்துண்டு, அது பிணமாக வேண்டியதுதானே!' அந்த முடிவுதான் இவனுக்கும் என்று முன்பு கனகசேனனின் மாளிகையில் தானிருந்த போது, பணிப்பெண்களான அல்லியும் கனகாவும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டது இப்பொழுது அஞ்சலையின் நினைவிற்கு வந்தது.

"பணிப்பெண்கள் பேசிக்கொண்டதைப்போல, இவர் மிகவும் கெட்டவரா?' என்ற எண்ணம், திடீரென்று அஞ்சலையின் உள்ளத்தில் தோன்றியது.

"அப்படி இவர் கெட்டவராகவோ முரடராகவோ இருந்தால், இப்பொழுது இளந்திரையனைச் சும்மாவிடமாட்டாரே!" என்று நடுங்கினாள்.

'இன்றுவரை என்னெதிரில் இவ்வளவு ஆணவத்தோடு எவனுமே பேசியதில்லை!" என்று கனகசேனன் ஆத்திரத்தோடு சொல்லிக்கொண்டே, அஞ்சலையின் பக்கம் முகத்தைத் திருப்பினான்.

"கேலிக்கு அண்ணா ஏதோ, சொன்னால், இப்படித்தான் தாங்கள் கோபித்துக் கொள்வதா? நன்றாக இருக்கிறது!' என்று அஞ்சலை தன் அச்சத்தை வெளிக்குக் காட்டாமல், சிரித்த முகத்தோடு பேசினாள்.

"கேலி செய்கிறானா இவன்? யாரை? என்னையா? சேரநாட்டு இளவரசன் நான் என்பதை நீ சொல்லிய பிறகுமா?"

"ஏன் இளவரசராக இருந்தால் கேலி செய்யக் கூடாதா?"

"கூடாது! அது பெரும் தவறு! என் அந்தஸ்து என்ன? இவன் அந்தஸ்து என்ன? கேலி செய்யலமா? செய்தால்தான் அனுமதிக்கலாமா?

"ஏனப்பா இளவரசர் என்று சொன்னதும் பயமாகிவிட்டதா என்று தாங்கள்தானே, முதலில் கேலி பேச ஆரம்பித்தீர்கள்?'

"ஆமாம், நான் கேலி செய்தால் அதற்குத் திருப்பி இவன் என்னைக் கேலி செய்வதா? நன்றாக இருக்கிறது அஞ்சலை, உன் பேச்சு! நான் இளவரசன்! யாரை வேண்டுமானாலும் அடிக்கவும், கோபிக்கவும், கேலி செய்யவும் எனக்கு அதிகாரம் இருக்கிறது! அந்த அதிகாரம் இவனுக்கு இருக்கிறதா?"

கனகசேனனின் பேச்சைக் கேட்டதும், அவனொரு அரைப் பைத்தியம் என்பதை இளந்திரையன் தெரிந்துகொண்டான். ஆகவே அவனிடம் கோபித்துக்கொள்வதோ, வீரம் பேசுவதோ அர்த்தமற்றது என்று எண்ணினான். ஆகவே அந்தப் பைத்தியத்திற்குத் திருப்தி தரும் வழியில் தான் நடந்துகொள்வதுதான் நல்லதென்ற முடிவோடு "இளவரசே, என்னை மன்னிக்க வேண்டும்! என் பேச்சுத் தங்களுக்கு இவ்வளவு கோபத்தை உண்டாக்கிவிடும் என்பது தெரிந்திருந்தால், நான் பேசியே இருக்க மாட்டேன்!" என்று மரியாதையோடு இளந்திரையன் பேசினான்.

இளந்திரையனின் பணிவைக் கண்டதும், இளவரசனின் குணம் இவனுக்கும் புரிந்துவிட்டது என்ற உண்மையை, அஞ்சலை தெரிந்துகொண்டாள்.

கனகசேனனை ஒரு பைத்தியம் என்று அவன் நினைப்பது — அவளுக்குச் சிறிது வருத்தத்தைத் தந்தது.

"இவரைப் பைத்தியம் என்று இளந்திரையன் கருதினால் எனக்கென்ன? எதற்காக என் மனம் அதற்கு வேதனை அடைய வேண்டும்!" என்று அவள் தன்னைத் தானே அறிந்துகொள்ள முயற்சி செய்தாள்! பாவம், அதுதான் அவளால் முடியவில்லை!

"உன் ஆணவமான பேச்சு......"

"அதைத்தான் மன்னித்துவிடுங்கள் இளவரசே என்று கேட்டுக்கொண்டேனே!"

"இனிமேல் அப்படியெல்லாம் பேசமாட்டாயே!"

"பேசமாட்டேன்!"

"பேசினால்?"

"நிச்சயமாகப் பேசமாட்டேன்!"

"பேசினால் என்ன செய்வது?"

"உறையிலிருக்கும் வாளை உருவி என் தலையை வெட்டிவிடுங்கள்!"

"இளந்திரையா, இதுவும் குறும்புப் பேச்சுத்தான்!"

"இல்லையே, இளவரசே!"

"பொய் வேறு துணிந்து பேசுகிறாயா? உன்னை நான் வெட்டமாட்டேன் என்பது, உனக்கு நிச்சயமாகத் தெரியும் அல்லவா?"

"ஆமாம், தெரியும்!"

"தெரிந்த பிறகு தலையை வெட்டிவிடுங்கள் என்றால், அது குறும்புப் பேச்சுத்தானே?"

"இரண்டாம் முறையாகவும் என்னை மன்னிக்கவேண்டும்; இளவரசே!'

"எதற்காக அஞ்சலையைப் பார்த்து இப்படி மெல்லச் சிரிக்கிறாய்......?"

"மூன்றாம் முறையாகவும் என்னை மன்னிக்கவேண்டும், இளவரசே.'

இளந்திரையன் செய்யும் குறும்பை அஞ்சலையால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால் வேதனையும் வெறுப்பும் அடைந்தாள். அந்தப் பேச்சுக்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு 'இளவரசே! தூமகேதுவின் ஆட்கள் நம்மைத் துரத்திக்கொண்டு வந்தாலும் வருவார்களே! இப்படிச் சாலையிலேயே நின்றுகொண்டு பேசுவது ஆபத்தல்லவா?' என்றாள்.

"ஆமாம்! ஆமாம்! ஆபத்துத்தான்!' என்று இளவரசன் சொன்னதும், 'தூமகேதுவின் ஆட்களா?' என்று இளந்திரையன் ஒன்றும் புரியாமல் கேட்டான்.

"இந்தப் புதருக்கு அப்பக்கத்தில் போய் உட்காரலாம், அண்ணா' அங்கே நடந்ததையெல்லாம் கூறுகிறேன்' என்று சொல்லிவிட்டு அஞ்சலை ஓர் அடியெடுத்து வைத்தாள்.

"நில் அஞ்சலை" என்று கனகசேனன் சொன்னதும் அஞ்சலை திரும்பிப் பார்த்தாள்-

"அஞ்சலை! ஓலையில் எழுதியிருந்ததைப்போலச் செய்துவிட்டேன்! இனி உன்னை எந்த ஆபத்தும் அண்டாது! இளந்திரையனிடம் உன்னைச் சேர்த்து விட்டேன்! அவன் உன்னைப் பத்திரமாக உன் ஊரில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவான்."

"ஆமாம், அதற்கு இப்பொழுது என்ன அவசரம்? வாருங்கள், அப்படிப் போய் உட்கார்ந்து நடந்ததையெல்லாம் முதலில் அண்ணாவிடம் கூறலாம்!"

"முதலில் என்னை அனுப்பிவிட்டு, பிறகு அதையெல்லாம் நீங்கள் பேசிக் கொள்ளுங்கள்!"

"உங்களை அனுப்பிவிடுவதா? அப்படியானால் நான்?

"உன் ஊருக்கு என்னையும் கூட வரவேண்டும் என்கிறாயா? இல்லை அஞ்சலை, நான் சேர நாட்டைவிட்டு வந்து பல நாட்களாகிவிட்டன! உடனே நான் வஞ்சிக்குச் செல்லவேண்டும்; அதன் பிறகு புத்தபுரத்திற்கும் போகவேண்டும்!"

"இப்பொழுது நான் ஊருக்குத் திரும்பப் போவதில்லை! தங்களோடே வஞ்சிக்கு நானும் வருகிறேன்."

"உண்மையாகவா, அஞ்சலை!

"ஆமாம், அந்தமாளிகை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது! அந்தப் பேசும் கிளி, அல்லி, கனகா, அன்னம், முல்லை ஆகியவர்களைப்பார்க்க எனக்கு அதிக ஆசையாக இருக்கிறது! அங்கு வந்து சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு, பிறகுதான் நான் என் ஊருக்குத் திரும்புவேன்!"

அப்படியானால் இளந்திரையனும் நம்மோடு வருகிறான் என்று சொல்!

'அண்ணாவிற்கு வேறு வேலை ஏதாகிலும் இருந்தால்...?' என்று அஞ்சலை, இளந்திரையனின் முகத்தைப் பார்த்தாள்.

"அஞ்சலை! உன்னைக் கண்டுபிடிக்க வேண்டியே, இத்தனை நாட்களும் இப்படி நான் அலைந்து கொண்டிருந்தேன்! இல்லையானால், உத்தமர் பொன்னையா எடுத்த பணியை, இதற்குள் நான் முடித்து விட்டிருப்பேன்! என்று இளந்திரையன் கூறிவிட்டு, நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

"உம் பேச்சு புரியவில்லையே, அண்ணா!"

"நான் புத்தபுரத்திற்குச் சென்று கொண்டிருந்தபோதுதான் உன்னை அன்று பார்த்தது!—"

"புத்த புரத்திற்கா?"

"ஆமாம், அஞ்சலை—அங்குதான் இப்பொழுது இருக்கிறான் நம் எதிரி!"

"யார்? பராக்கிரம பாகுவா?"

"இல்லை அஞ்சலை! குலசேகர பாண்டியன்! பூஞ்சோலை என்ற மாறுவேடத்தில் அங்கே நடமாடிக் கொண்டிருக்கிறான்! அது மட்டுமல்ல, இலங்கை இளவரசி திருமேனியின்மீது காதல் வேறு கொண்டுவிட்டானாம்..."

"என்ன? என்ன? என் திருமேனி மீதா, அவன் காதல் கொண்டுவிட்டான்?" என்று ஆத்திரத்தோடு கனகசேனன் கேட்டான்.

"ஆமாம்! அடிக்கடி அவர்கள் கள்ளத்தனமாகவும் சந்திக்கிறார்களாம்!" என்று இளந்திரையன் அலட்சியத்தோடு கூறினான்.

"திருமேனி! திருமேனி!" என்று முணுமுணுத்துக்கொண்டே கனகசேனன் சோர்ந்து தரையில் உட்கார்ந்துவிட்டான்.

திருமேனிக்கும் குலசேகரனுக்கும் காதலாமே என்று அவனது மனம் வேதனைத் தீயில் காய்ந்து காங்கியது. அவன் விட்ட ஒவ்வொரு மூச்சும், 'திருமேனி! திருமேனி!' என்றே கதறியது.

அவன் திருமேனியை எண்ணி எண்ணி ஏங்கியதைப் போலவே —அந்த அழகரசியும் குலசேகரனை நினைந்து நினைந்து உருகினாள்!

புத்தபுரத்தினின்றும் சிறிது தூரத்தில் குளக்கரையின்மீதிருந்த முனிவர் மண்டபத்தின் பக்கத்தில் திருமேனி நின்றிருந்தாள். கையிலிருந்த நாகலிங்க மலரை முகர்ந்து பார்த்தபடி, பாழடைந்த அக்குளத்தினுள் பார்க்கிறாள்.

ஒரு மூலையில், சிறிது தேங்கியிருந்த தண்ணீரில், இரண்டு வெள்ளை வாத்துக்கள் விளையாடிக் கொண்டிருந்தன. அவை அலகோடு அலகு தேய்த்து விளையாடுவதைக் கண்டதும், அந்தச் சேல்விழியாளின் மனக் கண்முன் குலசேகரன் வந்து நின்றான்.

அதற்கு முன்னால் அவ்வூரில், காளை மாட்டைப் பிடித்து அடக்கும் விழா ஒன்று நடைபெற்றது. அந்த விழாவைக் காண, தன் தந்தையோடு திருமேனி வந்திருந்தாள்.

அங்கே குலசேகரனும் இருப்பதைக் கண்டதும், காளை மாட்டின் உக்கிரத்தையும், அதை அடக்கிய வாலிபனின் நெஞ்சுரத்தையும் தோள்வலிமையையும் கண்டு ரசிக்க அவளால் முடியாமல் போயிற்று; அவளையும் அறியாமல் அடிக்கடி அவளது மான்விழிகள் குலசேகரனைப் பார்த்தன. அவனது புன்னகை, அவளது கன்னியுள்ளத்தைக் கள்வெறிகொள்ளச்செய்தது!

முன் தினம் நடைபெற்ற அந்த இன்ப நிகழ்ச்சியை எண்ணியவாறு, அவள் மண்டபத்தினுள் செல்ல புறப்பட்டாள்.

மண்டபத்தின் படிகளில் கால் வைத்தவள் அருகிலிருந்த நாகலிங்க மரத்தின் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

அந்தக் குளக்கரையை நோக்கிச் சிறிது தூரத்தில் குலசேகரன் வந்துகொண்டிருப்பதைக் கண்டதும், அவள் மனத்தில் மின்னல் கீற்றொன்று ஓடி மறைந்தது.

திடீரென்று அவள் மனத்தில் ஒரு யோசனை தோன்றியது. மெல்ல இன்பப் பண்ணொன்றை இசைத்துக்கொண்டே மண்டபத்தினுள் ஓடினாள். குளிர்ந்திருந்த கற்றரையில், கைகளைத் தலையணையாகக்கொண்டு மல்லார்ந்து படுத்து, அங்கே இருந்த ஓவியங்களைப் பார்த்தபடி, ஆனந்தத்தோடு பாடிக் கொண்டிருந்தாள்.

சிறிது தூரத்தில் காலடிச் சப்தம்! உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன் நெருங்கிவிட்டான்—தான் அங்கிருப்பதைத் தெரிந்து கொண்டான்—என்பதை அறிந்ததும், கண்களை மூடிக்கொண்டாள்! இசை நின்றுவிட்டது!

ஒரு கரம், அவளது செவ்விதழ்களைத் தொடுகிறது! அந்தக் கன்னிப் பெண்ணின் உடல் சிலிர்க்கிறது. மெல்லக் கண்களைத் திறந்து பார்க்கிறாள். புன்னகையோடு பாண்டியன் தன்னருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, அவளது கன்னங்கள் இரத்தச் சிவப்புப் பெறுகின்றன. 'அத்தான்!' என்று மனதிற்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டு, திரும்பவும் கண்களை இறுக மூடிக்கொள்ளுகிறாள்!

[வளரும்]

வீட்டுப்பால்

--[மா. கி. தசரதன் எம். ஏ.]--

'வீடு பெற நில்' என்று எப்போதோ படித்ததாக நினைவு. படித்தபோது அதன் பொருள் அவ்வளவாக விளங்கவில்லை. வீடுபெற ஏன் நிற்கவேண்டும் என்றே தோன்றியது. நாட்டுப் புறங்களில் வீடுபெற நிற்கத் தேவையில்லை. நகரங்களில் குறிப்பாகச் சென்னையில் வீடு பெற நிற்றல் மட்டும் போதாது; நடக்க வேண்டும், ஓடவேண்டும். வீடு பெறுவதற்கு மட்டும்தானா? சென்னையில் எதற்குமே நிற்கத்தான் வேண்டியிருக்கிறது; ஓடத்தான் வேண்டியிருக்கிறது அரிசி பெற, பருப்புப்பெற, காப்பிக் கொட்டை பெற, சினிமா டிக்கட் பெற, பஸ்ஸில் இடம்பெற எதற்குமே நிற்கவேண்டியிருக்கிறது; ஓடவேண்டியிருக்கிறது.

ஆனால் எப்படியோ தெரியவில்லை நிற்காமலே எனக்கு வீடு கிடைத்துவிட்டது. 'வீடுவேண்டுமே' என்று கேட்டேன் — இப்போது போய்ப் பார்க்கலாம் என்றார்; சென்றோம்; பார்த்தோம்; பெற்றோம். இத்தனை சுலபமாக வீடு கிடைததுவிட்டதற்குப் பின்னால்தான் வீடு பற்றிய சிந்தனை என்னைப் பிடித்துக் கொண்டது.

இவ்வளவு சுலபமாக வீடுகிடைக்கும்போது வீடு பெற ஏன் நிற்கச் சொன்னார்கள் என்று தோன்றியது.

அவர்கள் சொன்னது, இந்த வீட்டை அல்லவாம். மேலே ஒரு வீடு இருக்கிறதாம்! அது ஆளுக்கு ஒரு வீடு அல்ல. இருப்பது ஒரு பெரிய வீடு. அந்த வீட்டுக்குள்தான் எல்லாரும் போகவேண்டும். அது கொஞ்சம் சிரமமான செயல்; அதனால்தான் வீடு பெற நில் என்று இருப்பதாக விளக்கம் கூறினார்கள்.

திருவள்ளுவர்கூட பாருங்கள் அந்த வீடு கிடைப்பது அருமை என்ற காரணத்தினால்தான் அறத்துப்பால் பாடினார், பொருட்பால் பாடினார், இன்பத்துப்பால் பாடினார். வீட்டுப்பால் பாடவில்லை என்றார்கள். அவருக்கே வீட்டுப்பால் கிடைக்கவில்லையே என்று குறிப்பிட்டு ஒரு நண்பர் வருத்தப்பட்டார். எனக்கே மிகவும் வருத்தமாக இருந்தது. திருக்குறளில் வீட்டுப்பால் இல்லையே என்று ஏங்கினேன்.

பரிமேலழகருக்குக்கூட இப்படி ஒரு பரிவு ஏற்பட்டிருக்கும்போல் தோன்றுகின்றது. அதனால்தான் அவர் வீட்டுப்பால் என்று தனியாக இல்லாவிட்டால் என்ன, மூலத்தில் இல்லாததை நம் உரையில் உரைத்து நிறைத்துவிடலாம் என்று நினைத்தார்போலும். உரை எழுதும்போது வீடு என்பதைக் கொண்டு வந்து கூட்டிப் பொருள் கூறி மனச்சாந்தி பெறுகின்றார். வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆதலின்— ஏனை மூன்றுமே நுல்களால் கூறப்படுவன என்று பாயிரத்தில் பகர்ந்த பரிமேலழகர் வீட்டைப் பற்றித் திருவள்ளுவர் கூறியிருக்கின்றார் என்று நிலைநாட்ட முயலுவது விந்தையே!

வீடு என்பது மோட்சம் என்ற பொருளில் திருக்குறளில் எங்காவது இருக்கிறதா என்று தேடிப் பார்த்தேன். வீடு என்ற சொல்லே திருக்குறளில் ஒரே இரு இடத்தில்தான் இடம் பெற்றுள்ளது. அதுவும் விடுதலை என்னும் பொருளில்! அறத்துப் பால், பொருட் பால், இன்பத்துப் பால் பாடி வீட்டுப்பால் எனத் தனியே பாடாது விட்டது மட்டும் அல்ல; வீடு என்னும் சொல்லையே திருவள்ளுவர் விட்டுவிட்டார்!

இருந்தும் ஏனோ தெரியவில்லை, அறம் பொருள் இன்பம் வீடு என்று உள்ள பொருள் நான்கு, அவற்றுள் திருவள்ளுவர் முதல் மூன்றின் வாயிலாக நான்காவதை உணர்த்துகின்றார் என்று சொல்லிக்கொண்டு வருகின்றார்கள்.

இந்த அறம் பொருள் இன்பம் வீடு என்ற தொடரையே வள்ளுவர் ஓரிடத்தில் ஆளும் வாய்ப்பு நேருகின்றது. அங்கே 'வீடு' என்பதனை விட்டு விட்டிருக்கிறார்.

"அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின் திறம் தெரிந்து தேறப்படும்."

என்று தெளிவாக உயிரச்சம் என்றுதான் கூறுகின்றார்; வீட்டுக்கு விடுதலை தந்துவிட்டார்! இந்தக் குறள் 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்தில் அல்லவா வருகின்றது, அதனால் அங்கே வீடு பற்றிக் கூறாமல் உயிரச்சம் பற்றிக் கூறினார் என்பர் சிலர். ஆனால் அறம் பொருள் இன்பம் என்னும் தொடர் வந்ததும் வீடு என்று அதை நிரப்பத்தான் விரைகின்றோம். அதைத் தடுக்கவேண்டும் என்று விரும்பியவரைப்போல வள்ளுவர் அறம் பொருள் இன்பம் உயிரச்சம் என்று அந்தத் தொடரில் ஒரு புதிய சொல்லை அமைத்து நம்மை விழிப்படைய வைக்கின்றார்.

ஏன், வள்ளுவர்க்கு வீடு பிடிக்காதோ? மேல் உலகம், மறு பிறவி போன்ற பல கருத்துக்களைக் கூறியுள்ள வள்ளுவர் வீட்டுக்கு வீடு (விடுதலை) தந்தது ஏனோ!

தமிழர் பொருள் பாகுபாடு செய்த முறை வேறு; வடவர் பொருள் பாகுபாடு செய்த முறை வேறு. தமிழர் அகம்—புறம் என்ற இரண்டு வகையாக மட்டுமே பொருள்களைப் பிரித்தனர். பழைய நூல்களில்—சங்க இலக்கியங்களில்—இந்தப் பாகுபாடே உள்ளது. இதுவே இயற்கையானதும்கூட.

உலகத்தில் ஆண், பெண் என இரு பெரும் பிரிவுகளே உள. ஆண் (இயற்கையாக) புறத்திற்கும், பெண் அகத்திற்கும் சிறப்பிடம் பெறத்தக்கவாறு உடலமைப்பு, வாழ்க்கை முறை அமைந்துள்ளது. அதனால்தான் நம் முன்னோர்கள் அகம், புறம், என்று மட்டுமே பொருள்களைப் பாகுபாடு செய்தனர். ஆனால் பிற்காலத்திலோ வடவர் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள முற்பட்டபோது உண்மைப் பொருள்களை, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைக்குள் அடக்க முயன்றனர்.

வள்ளுவர் நூல் பல இடங்களில் வந்த கருத்துக்களை வாதத்திற்கு இழுத்துவைத்து, மறுத்திருக்கக் காணுகின்றோம். எப்பாடுபட்டேனும், எவ்வாறேனும் பெற்றோர் துன்பம் துடைக்கவேண்டும் என்பது பிறர் கொள்கை. ஆனால் வள்ளுவரோ 'ஈன்றாள் பசி காண்பான் ஆயினும், செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' என்று தடைபோடுகின்றார். மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று என்று துணிந்து கூறுகின்றது குறள். இப்படிப் பல இடங்களில் வேறுபட்டு நிற்கும் வள்ளுவர் பொருள்களின் பகுப்பு முறையிலும் மாறுபடுவதில் வியப்பு இல்லை.

அறம், பொருள், இன்பம் என்றுள்ள பாகுபாட்டைவிட, அகம், புறம் என்ற பாகுபாட்டுக்குள் வள்ளுவர் குறளை

(12-ம் பக்கம் பார்க்க)

ஆடை அரசியல்!

"பொறுப்பும் மதிப்பும் வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் போலிசாரைக் கண்டதும் நிலை தள்ளாடிய நிலையில் குடித்துவிட்டு ஆடியிருக்கிருர்; மூன்று பாட்டில்களுக்கு மேல் விஸ்கி அவரது வயிற்றுக்குள் போயிருக்கிறது. ஆடையைக் கழற்றிவிட்டு நிர்வாண நடனம் ஆடியிருக்கிருர்"

இப்படி ஒரு குற்றச் சாட்டு கென்யா நாட்டில் இரு கிழமைகளுக்கு முன் எழுந்தது. இதற்கு ஆளானவர் ஒகிங்கா—ஓடிங்கா என்னும் இடதுசாரி மக்கள் கட்சித் தலைவர்.

குற்றத்தைச் சுமத்தியவர் டேனியல் அரெப்மாய் என்னும் உள் விவகாரத்துறை அமைச்சர்.

குற்றம் சாட்டிப் பேசப்பட்ட இடம் கென்யா நாட்டு சட்டசபை.

அங்குமட்டுமல்ல; நாடு பூராவிலுமே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இது என்ன புதுக் குற்றச்சாட்டு? ஆடை பற்றியும் நிர்வாணம்பற்றியும் நிலை தடுமாறிய ஆட்டம்பற்றியும்? அதுவும் ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவரைப்பற்றி? என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டது.

பின்னும் சில நாட்களில் குற்றம் சாட்டப்பட்ட ஒகிங்கா, பத்திரிகையாளர் முன் தோன்றினுர், ஆடை குறைந்த நிலையில் அல்ல; முழு ஆடையுடன்தான்!

"மதிப்புக்குரிய அமைச்சர் கூறியதைஅப்படியேமறுக்கிறேன். ஆறு ஆண்டுக்காலமாக மதுபான வகைகள் எதையும் நான் தொட்டது கூட இல்லை; எனவே போலீசாரின் முன்னர் குடித்துவிட்டு ஆடினேன் என்பது முழுப்பொய்! இதற்காக அமைச்சா என்னிடம் மன்னிப்புக் கேட்கக்கடமைப்பட்டிருக்கிருர்"

"ஆடை களையப்பட்ட நிலையில் ஆடி வந்தேன் என்று கூறப்பட்டது முழுவதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன. போலிசார் என்னை சோதனை செய்ய பலவந்தமாக முயற்சித்தார்கள். கடத்தல் பொருள்களை — அந்நிய நாணயங்களை — ஏதும் எடுத்துவரவில்லை, மறைத்துவைக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக அவர்களிடம் ஆடைகள் அனைத்தையும் உதறிக் காட்டினேன். அவ்வளவுதான்! ஆடைகளைப்பு நடனம் ஆடவில்லை' அதிகாரிகளை அதன்மூலமாக மிரட்டவுமில்லை"

இப்படி ஒரு விளக்கம் தந்தார் எதிர்க்கட்சித் தலைவர் ஓடிங்கா!

தூரத்துக் கென்யா நாட்டிலிருந்து வந்துள்ள சூடும் சுவையும் நிறைந்த இச்செய்தியின் பின்னணி இதுதான்:

விடுதலைக்குப் பாடுபட்டு இப்போது சொந்த அரசு அமைத்திருக்கும் கென்யாட்டாவின் ஆளுகை அன்ருடம் அரசியல் எதிர்ப்புக்கு ஆளாகி வருகிறது. ஒகிங்காவின் தலைமையில் உள்ள மக்கள் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிவிடுவதற்கான அறிகுறிகள் நாளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆனல் ஆளும் கட்சியோ இந்த வளர்ச்சியை ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துவதன் மூலம் தடுக்கப்பார்க்கிறது.

"கம்யூனிச சக்திகள் கென்யாவின் எதிர்க்கட்சிக்குப் பணமும் ஊக்கமும் தந்து ஆட்சியைக் கவிழ்ககச் சதி செய்கின்றன. அண்மையில்கூட 1,120,000 டாலர்கள் மதிப்புள்ள அந்நிய நாணயம் கென்யாவின் எதிர்க்கட்சியினருக்குக்கள்ளத்தனமாக வந்திருக்கிறது" என்று ஆளும் கட்சி குற்றம் சுமத்துகிறது.

இதற்கு மேலும்மெருகு தருவது போலத்தான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட 'ஆடைகளைப்புச் செய்தி' வந்திருக்கிறது.

உகண்டா என்ற அண்டை நாட்டில் நீண்ட நாள் பயணம் செய்துவிட்டுக் கென்யாதிரும்பிக்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் அந்நிய நாணயம் ஏதேனும் உடன் எடுத்து வருவாரோ என்று ஐயப்பட்டு சோதனை இடுவதற்காகப்போலீசை அனுப்பிவைத்தது அரசு.

நாட்டின் எல்லையில் அவர் ஒரு போலீசு அதிகாரியால் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டபோதுதான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட 'சம்பவம்' நடந்திருக்கிறது.

"அமைச்சர் குற்றம் சாட்டியது போல குடித்த நிலையிலும் இல்லை. ஆடையைக் களைந்துவிட்டு நடனம் ஆடி அதிகாரிகளைப் பயமுறுத்தவும் இல்லை. நான் அப்போது என்னுடன் வைத்திருந்தது 140-டாலர் மதிப்புள்ள பணம்தான்—அதுவும் கென்யா நாட்டு நாணயம்தான். அமைச்சர் குற்றச்சாட்டு அபாண்டம்" என மறுத்துள்ளார் ஓடிங்கா.

ஆடை குறைப்போ—களைப்போ சமுதாயத்திலேயே தடைப்படுத்தப்பட்டிருக்கும்போது கென்யாவின் அரசியலில் பொறுப்புள்ள இரு தரப்பினர் அதை சூடும் சுவையும் கூட்டிப்பேசியிருப்பதும் விவாதித்திருப்பதும் வேதனையும் வேடிக்கையும் கலந்த செய்தியாக இருக்கிறது!

—எஸ். ஆர்.

11-ம் பக்கத் தொடர்ச்சி

அடக்குவோமாயின் சிறப்பாக அப்பாகுபாடு அமையும் எனலாம்! இயற்கையான பாகுபாட்டு முறையாகவும் அது அமையும். அறம், பொருள், இன்பம், கூறி வீடு கூருதுவிட்டார் வள்ளுவர் என்று வருந்தவும் வேண்டாம்; அவர் சொல்லாத வீட்டை நாம் செல்லத் தொடங்கி இடர்ப்படவும் வேண்டாம்.

வள்ளுவர் காலத்தில், (சங்க காலத்தை அடுத்த காலம் வள்ளுவர் காலம் என்று பலர் ஒப்புகின்றனர்) இருந்த பொருள் பாகுபாட்டு முறைக்கும் அது ஒத்ததாக விளங்கும்.

எட்டுத் தொகை நூல்கள், அகம் புறம் என்ற பாகுபாட்டையே அடிப்படையாகக் கொண்டு, அடி அளவுகளால் தொகுக்கப்பட்டுள்ள பெற்றிமையைக் காண, திருக்குறளும், அதேபோல் அகம், புறம் என்னும் இரு பிரிவுகளைக்கொண்டது என்று கூறுவது தவறுடையது ஆகாது என்று கருதலாம்.

'திருக்குறளிலா, புதிய பால் பகுப்பு முறை?' என்று புருவத்தை உயர்த்திக் கேட்காமல் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆராய்ச்சி உலகம் செய்யும் என நம்புவோமாக.

✻

இன்று 'பிழைப்போம்!' நாளை கிடக்கட்டும்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

நோட்டுப் பெற்றிட சீமான்கள் தேவைப் படுகிறார்கள்; ஓட்டு வைத்திருக்கும் ஏழைகளுக்குத் தித்திப்புத் தந்திட சோஷியலிசம் பேச வேண்டி இருக்கிறது என்று பச்சை யாகவே சொல்லிவிடுவார்! பச்சைத் தமிழரல்லவா!!

தம்பி! காங்கிரஸ் கட்சியின் அமைப்பை எடுத்துக் கொண்டுபார்த்தாலும், காங்கிரஸ் ஆட்சியின் செயல் முறைகளை ஆராய்ந்து பார்த்தாலும், சோஷியலிசம் வருவதற்கான சூழ்நிலையே இல்லை என்பது நன்றாகப் புரிகிறது.

என்றாலும், காமராஜர், சோஷியலிசம் பேசுகிறார்; எந்தத் துணிவு காரணமாக?

அதனை விளக்கிட ஒரு சிறு கதை கூறியாக வேண்டும். தம்பி! கூறட்டுமா?

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன், மன்னன் முன் மண்டியிட்டு, அரசே! ஒரு வேண்டுகோள்; என்னை இப்போதே தூக்கிலே போட்டுவிடச் சொல்லாதீர்கள், ஒரு வருடம் எனக்கு அவகாசம் தருக! அதற்குள் நான், தங்கள் பட்டத்துக் குதிரைக்கு 'பறந்திட'க் கற்றுக்கொடுக்கிறேன்; அதனைக் கண்ட பிறகு, எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை தள்ளுபடி செய்துவிடலாம். ஒரு வருடத்திற்குப் பிறகு, குதிரைக்குப் பறக்கும் சக்தி வந்திடச் செய்யத் தவறினால் என்னைத் தூக்கிலே போட்டுவிடுங்கள்' என்று முறையிட்டுக் கொண்டான். மன்னன், குதிரையே பறந்திடுமாமே, பார்ப்போமே என்று எண்ணிக் கொண்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தவனுக்கு ஒரு வருடம் விடுதலை தந்தான்.

மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்ட அந்த தந்திரக்காரனை அவனுடைய நண்பன் பார்த்து, "ஒரு வருடத்தில் குதிரைக்குப் பறக்கும் சக்தி பெற்றுத் தருவதாகக் கூறிவிட்டு, ஒரு வருட விடுதலை பெற்றுக் கொண்டாயே! ஒரு வருடம் முடிந்ததும், உன்னைத் தூக்கிலே போடாமல் விடுவார்களா? மன்னனுக்கு இப்போது உள்ள கோபத்தைவிட அதிகமாக அல்லவா கோபம் வரும், நம்மை ஒரு ஏமாளி என்று இவன் எண்ணிக் கொண்டான்? தூக்கு மரத்திலே தொங்கட்டும்- இவன் உடலைக் கழுகும் நரியும் விருந்தாக ஆக்கிக் கொள்ளட்டும் என்றல்லவா கட்டளை பிறப்பிப்பான்! என்ன செய்வாய் அப்போது! என்று கேட்டான்.

தந்திரக்காரன் சொன்னான்,

ஒரு வருடத்திற்குப் பிறகு நடக்கக் கூடியதுபற்றி இப்போது ஏன் எண்ணிக் கொண்டு வேதனைப்படவேண்டும்?

தூக்குமேடையில் இருந்து வெளியே வந்திருக்கிறேன்; ஒரு வருடம் அவகாசமும் கிடைத்திருக்கிறது.

இந்த ஒரு வருஷத்திற்குள் 'அரசனே இறந்துபடக்கூடும்,

அல்லது நானே மடிந்துபோகக்கூடும்!

அல்லது குதிரை, பறக்க ஆரம்பித்தாலும் ஆரம்பித்துவிடக்கூடும்!!

ஒரு வருடத்தில் என்னென்னமோ நடைபெறலாம்.

நம்பிக்கைகொள்ளவேண்டும்! உடனடியாகக் கிடைத்திடும் பலனைத்தான் கணக்குப் போட்டுப் பார்த்திடவேண்டும் ஒரு வருடத்திலே ஏதேதோ நடக்கலாம்; அதன் காரணமாக, எனக்கு நிபந்தனையற்ற விடுதலை கிடைத்தாலும் கிடைக்கலாம்.

ஒரு வருடத்திற்குப் பிறகு, தூக்கிலே போடுவார்களே என்பதுபற்றி இப்போதே எண்ணி எண்ணி மனம் புண் ஆவானேன்.

ஒரு வருடம் கிடைத்திருக்கிறது' அந்தக் காலத்தில், பெறவேண்டிய வசதி", வாழ்க்கை இன்பத்தை ஏன் இழந்திடவேண்டும்? என்று கேட்டானாம்.

அதுபோலக் காமராஜர், சோஷியலிசம் கொண்டுவரவில்லையே; முடியாமற் போய்விட்டதே என்று எண்ணி ஏக்கம் கொள்ளாமல், குதிரையைப் பறக்க வைக்கப்போகிறேன் என்று பேசி, மரண தண்டனையைத் தவிர்த்துக்கொண்டவன் போலப் பேசுகிறார், சோஷியலிசம்பற்றி.

சோஷியலிசம் பேசி ஓட்டுகளைப் பறித்துக்கொள்வோம்; முதலில்; பிறகு, சோஷியலிசம் ஏன் கொண்டு வரவில்லை என்று மக்கள் கேட்டுவிட்டுப்போகட்டுமே! கொடுத்த ஓட்டுகளைத் திருப்பியா வாங்கிக்கொள்ள முடியும்'! — என்று அவர் எண்ணுகிறார் என்பது

விற்பனையாகிறது!

இரண்டாம் ஆண்டில் நடைபோடும்

"கதிர்"

(இலக்கிய மாத இதழ்)

ஆசிரியர்: ப. புகழேந்தி

நவம்பர் இதழில்

எம். வி. வெங்கட்ராம்
பி. பத்மராஜு
'லதா'
காரூர். நீலகண்ட பிள்ளை
க. நா. சுப்ரமணியம்
கி. ராஜநாராயணன்

ஆகியோரின்

தெலுங்கு, கன்னட, மலையாள, தமிழ்ச் சிறுகதைகள், கட்டுரைகள் மற்றும் துணுக்குகள் இன்னும் பல.

விலை 40 காசு

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

கதிர், சென்னை-6

'கொல்லாமை' பேசும் 'குரு' தின்பது யாது?

விளங்கவில்லையா, தம்பி! ஆம், என்கிறாய். மற்றவர்களும் விளக்கம் பெற்றிடவேண்டாமா?

அதற்காகத் தம்பி! சோஷியலிசம் பேசிடும் காமராஜரின் காங்கிரசிலே, எத்தகைய முதலாளிகள் கொலு இருக்கிறார்கள் என்பதை மக்களுக்கு எடுத்துக்காட்டிட வேண்டும்.

O

'வலதுகரம்' — என்றும், தேர்தல் பிரசார பீரங்கி என்றும் கொண்டாடுகிறார்களே, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை; அவருந்தானே பேசுகிறார், சோஷியலிசமே எமது இலட்சியம் என்று; அவர் நிலை என்ன என்பதை நாடு அறிந்துகொள்ள வேண்டாமா?

ஒருவரிடம், வருவாய் தரத்தக்க தொழில், வாணிப அமைப்புகள் குவிந்துவிடுமானால், மக்களின் உழைப்பினால் உற்பத்தியாகும் செல்வத்திலே பெரும் பகுதி, அந்த ஒருவரிடம் போய்ச் சேர்ந்துவிடுகிறது. ஏழை பணக்காரன் பேதம், அகன்ற வாய்கொண்ட பெரிய பள்ளமாகிவிடுகிறது.

இதைப் போக்குவதுதானே சோஷியலிசம்?

இதைத்தானே காங்கிரஸ் தனது திட்டமாகக் கொண்டுள்ளதாக, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறுகிறார்.

அப்படியானால், அந்த நேர்த்திமிக்க இலட்சியவாதி எந்த நிலையிலே இருக்கிறார்?

அவருடைய குடும்பத்திடம் உள்ள தொழில் அமைப்புகள்-வருவாய்த் துறைகள்-எப்படி உள்ளன? அளவும் வளமும் எப்படி இருக்கிறது என்பதனை நாடு தெரிந்துகொள்ள வேண்டாமா?

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தமக்கு இந்தியப் பேரரசில் கிடைத்திருந்த அமைச்சர் பதவியைப் பயன்படுத்தி, தொழில் அமைப்புகளைப் பெரிதாக்கிக் கொண்டார் என்ற புகார் கிளம்பிற்று.

நான் அந்தப் புகார்பற்றிய நோக்கத்துடன் இதனைக் குறிப்பிடவில்லை.

மிகமிக நியாயமான, நேர்மையான முறைகளிலேயே இந்தத் தொழில் வாணிப அமைப்புகள் வளர்ந்தன என்றே வைத்துக்கொள்வோம்; ஆனால் இவ்வளவு வருவாய்த்துறைகள், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பம் ஒன்றினிடம் இருந்திடலாமா? இருக்க விடுவது, சோஷியலிசமா? இருக்கும்போது, அவர் சோஷியலிசம் பேசுவதிலே பொருள்தான் உண்டா? என்ற இவைபற்றிச் சிந்தனையைக் கிளறிவிடுவதற்காகவே கூறுகிறேன்.

வெட்டப்பட்டதோ, வெடிப்பு விரிவானதோ, எதுவாக இருந்தால் என்ன; பள்ளம் பள்ளந்தானே!

தம்பி! சோஷியலிசம் பேசிடும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பத்திடம் உள்ள தொழில் — வாணிப அமைப்புகளின் பட்டியல் — எனக்குக் கிடைத்துள்ள அளவு — தருகிறேன் — பார்த்திடு! — காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசம், நம்பத்தகுந்ததுதானா என்பதுபற்றிய தெளிவு, தன்னாலே வந்திடும்,

டில்லி
கல்கத்தா
விஜயவாடா
பம்பாய்
விசாகபட்டினம்
சென்னை
ஐதராபாத்
கொச்சி
பெங்களூர்
ஆமதாபாத்
கோயம்புத்தூர்

இத்தனை நகரங்களிலே, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பத்தாரின் வணிக அமைப்புகள் உள்ளன.

'ஏகபாரதம்' — எத்தனை எழிலுடன் விளங்குகிறது என்பதனை எடுத்துக்காட்ட, இந்த 'பேரரசு' அமைக்கப்பட்டிருக்கிறதுபோலும்!

இங்கெல்லாம் உள்ள கம்பெனிகளில், எத்தனை இவர் அமைச்சர் வேலை பெற்ற பிறகு வளர்ந்தன, மூலதனம் எப்படியெப்படி கிடைத்தன என்பன பற்றிய தகவல் அறிந்திட நான் முனையவில்லை.

நான், இந்தப் பிரச்சினையில் ஊழல் இருக்கிறதா, அக்ரமம் நடந்திருக்கிறதா என்ற கேள்வியிலே என்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை.

எனது நோக்கமெல்லாம், சோஷியலிசம் பேசிடும் ஒருவரின் குடும்பம், பொருளாதாரப் பேரரசு அமைத்து ஆண்டுகொண்டிருக்கும் விந்தையை நாடு அறியச் செய்யவேண்டும் என்பதேயாகும்.

'கொல்லாமை பற்றி உருக்கமான 'உபன்யாசம்' செய்திடும் 'குரு' சாப்பிடும் கோழிப் பிரியாணியின் அளவுபற்றிய தகவலைத்தான் நான் தருகிறேன்; கோழி விலை போட்டு வாங்கியதா, கொல்லைப் புறத்தில் மேயவந்த வேறோர் வீட்டுக் கோழியா, என்பது பற்றிய 'மர்மம்' நான் தரவுமில்லை; எனக்குத் தெரியவும் தெரியாது. இனி அந்தப் பேரரசைக் காணலாம்.

1. ஓரியண்டல் காஸ்மாடிக்ஸ்
2. T. T. கெமிகல்ஸ்
3. டார்டாய்ஸ் இந்தியா
4. ஓரியண்ட் பர்மா
5. கொப்பா பார்மா
6. ரைட்எய்ட்ஸ் ஓரியண்ட்
7. T. T. லிமிடெட்
8. டைம் எய்ட்ஸ், இந்தியா
9. லண்டன் ரப்பர் கம்பெனி
10. பாக்வெல் இண்டஸ்ட்ரீஸ்
11. பிரிஸைசன் என்ஜினியர்ஸ்
12. இன்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ்

அமைப்பின் அளவை, தொகையைப் பாரீர்!

13. L. D. ஸேமோர் அண்:கோ
14. காட்டரி, ப்ரை இந்தியா
15. செஸ்பிரோ பிராண்டு இந்தியா
16. இந்தூரி.:பாரம்
17. A. K. பார்மா கெமிக்ஸ்டிக்ஸ்
18. T. T. கிருஷ்ணமாச்சாரி கம்பெனி.

தம்பி! பெயர்கள் யாவும் ஆங்கிலப்-நான் செய்த தவறு அல்ல; அந்தக குடுப்பம் பெற்ற பேறு!!

இந்த அமைப்புகளுடன், நாடெங்கும் மக்கள் விருமபி வாங்கிடத்தக்க பல பொருள களுககு, இந்தக் குடும்பம், 'ஏஜன்சி' உரிமை பெற்றிருககிறது.

1. உட்வார்ட்ஸ் கிரைப் வாடர்
2. பாண்ட் கிரீம்
3. வாடர்மென் இங்க்; பேனு
4. பிரஸ்டிஜ் குக்கர்
5. வெஸ்ட்கிளாக்ஸ் கடிகாரங்கள்
6. அதுல் உற்பத்திப் பொருள்கள்
7. நவஸரி ஆயில் மில்ஸ்
8. ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
9. பக்கிம்ஹாம் கர்னுடிக் மில்ஸ்
10. குட்லாஸ் வால் பிக்மண்ட் அண்டு ரிஸின்ஸ்
11. காட்பெரி சாக்லட்
12. போர்ன்விடா
13. மாக்ஸ்:பாக்டர் காஸ்மாடிக்ஸ்
14. எஸ்ஸோவின் பிளிட்
15. மெட்டல் ஸ்ப்ரேயர்கள்
16. டாக்டர் வெஸ்ட்டின் பல் பிரஷ்
17. வில்லியம் ஷேவிங் சோப்
18. காரெட் பிளேடுகள்
19. எபிக் டூத் பேஸ்ட்
20. ஸ்கைலின் கட்லரி
21. சாயம் — ரசாயனப் பொருள்கள்

அளவும், வகையும் விளங்குகிறதல்லவா, தம்பி!

பிளேடுகூட! பிரஷ்கூட! பல்பசைகூட! பூச்சி மருந்தைக்கூட விடவில்லை!!

இத்தகைய ஒரு பேரரசு இந்தக் குடும்பத்துக்கு. இந்தக் குடும்பத்தலவா பேசுவதோ சோஷியலிசம்!! தம்பி! மக்களை ஏமாளிகள் என்ற தீர்மானித்து விட்டிருந்தாலொழிய, பேசிடும் துணிவு பிறந்திடுமா?

இந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், காமராஜருக்கு வலதுகரமாம்!

ராஜதந்திர முறை கூறிடும் மூளையாம்! பேசிக் கொள்கிறார்கள்;

மக்கள் இதனை அறியமாட்டார்களா—இப்படிப் பட்டவர்களைக் கொண்டு இயங்கி வரும் காங்கிரஸ் கட்சி, எப்படி சோஷியலிசத்தைக் கொண்டுவர முடியும் என்று கேட்கமாட்டார்களா என்ற எண்ணம் ஏற்படவே செய்யாதா காமராஜருக்கு? ஏற்படும்!

ஆனால், கதை தந்துள்ளேனே அதுபோல, குதிரையை பறக்கவைக்கிறேன் என்று கூறி, மரண தண்டனையிலிருந்து இப்போதைக்குத் தப்பித்துக் கொள்ளலாம் என்று திட்டமிடுகிறானே தந்திரக் காரன் அதுபோலக் காமராஜர், பின்னாலே என் னவோ நடந்துவிட்டுப் போகட்டும், இப்போதைக்கு சோஷியலிசம் பேசி மக்களை மயக்கி ஓட்டுகளைத் தட்டிக்கொண்டு, காங்கிரசு ஆட்சிக்கு ஆபத்து ஏற் படாமல் பார்த்துக்கொள்வோம் என்று திட்டமிடு கிறார். புரிகிறதல்லவா?

அண்ணன்,

அண்ணாதுரை

என்ன கோபம்?

முத்தனுக்குப் பொன்னியிடம் கோபம்; ஆசை
 முத்தமில்லை என்பதனால்-அன்புக் கோபம்!
கத்துகின்ற குழந்தையிடம் கோபம் தோன்றும்!
 கைக்குழந்தை அன்னையர்க்கு-தாய்மைக் கோபம்!
எத்தர்களைக் கண்ணுற்றால் கோபம்; நேற்று
 ஏமாந்த மாந்தர்க்கு-இயல்புக் கோபம்!
பொத்தல்நிறை ஆட்சியிலே குறைகள் சொன்னால்
 'பொதுக்'கென்று வருகிறதே-என்ன கோபம்?

குடிசையிலே மழைபெய்து ஒழுகும் போது
 குப்பனுக்குக் கோபம் வரும்-ஏழ்மைக் கோபம்!
அடிசறுக்கி வீழ்ந்தவுடன் கோபம் தோன்றும்!
 அழமுடியா முதியோர்க்கு-முதுமைக் கோபம்!
வடிவழகு மழலைக்குக் கோபம்! கையில்
 வண்ணநிலா பிடித்துத்தா! என்று கேட்டு!
அடிமையெனத் தமிழ்த்தாயை ஆக்குவோரே,
 அதையெதிர்த்தால் வருகிறதே-என்ன கோபம்?

கைப்பொருளை இழப்போர்க்குத் தோன்றும் கோபம்;
 கடுகளவும் பிழையில்லை!-ஆனால் சொந்தக்
கைப்பொருளா இந்நாடு, ஆட்சி எல்லாம்
 கனிந்துவந்த பரம்பரையின் சொத்தா[மக்கள்
மெய்ப்பொருளாய் எங்கள்பக்கம் திரண்டு வந்தால்
 மேனியெலாம் எரிவதுபோல் ஏனோ கோபம்?
பொய்ப்புரட்டு-பணப்பெட்டி வாக்குப் பெற்ற
 பழங்காலம் மறைந்ததையா? கோபம் வேண்டாம்!

-காவிரி வேந்தன்

சென்னை: வெலிங்டன், பிராட்வே, ராக்ஸி, ராம்

மற்றும் தென்னாடெங்கும்.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்